# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 ஆவணி மாதம் 21ம் திகதி முதல் ஆவணி மாதம் 27ம் திகதி வரை

***''கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமை சொத்தாக்கிக் கொள்வர்.''***

01. ஆரம்பப் பாடல் புபுது பாடல் இல 05 ஞானம் வீரம் சக்தி…..

02. புகழ்ச்சிக்கான நோக்கு ''என்னைப் பின் பற்றுங்கள்'' ஆண்டவரின் அழைப்பினை ஏற்று அவரைப் பின் தொடர தீர்மானமெடுத்த நீங்கள் நான் எவ்வளவு பேறுபெற்றவர்கள் ? எமது வாழ்வில் அனுபவிக்கின்ற எல்லா நிகழ்வுகளையும் பேறுபெற்றதாக கருதுவதற்கு எமக்கு இருக்கின்ற முடியுமான தன்மையே உண்மையாகவே பாக்கியமல்லவா? ஏழ்மை, துன்பம், தனிமையினுள் இருக்கும் பேறுபெற்ற தன்மையைக் காண்பதற்கு முடியுமாவது ஆண்டவரையே நோக்கியவாறு அவரைப் பின் தொடரும் உங்களாலும் என்னாலும் மாத்திரமே. அவ்வாறான விசேடமான வரப்பிரசாதத்தை பெற்றவர்கள் என்றவகையில் இன்றைய நாளில் ஆழமான உள்ளாந்தர மகிழ்ச்சியுடன் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம். புபுது பாடல் இல 129 'பூர்ணமானவரே உம்மை…''

03. நாளுக்குரிய நற்செய்தி

''கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமை சொத்தாக்கிக் கொள்வர்.''

அவரைப் பின்பற்றுவொரில் இருக்க வேண்டிய மிகவும் உத்தமமான குணமே கனிவு….

- படைப்பில் மேன்மையான படைப்பாக மனிதனை படைத்து, இறைவன் அவனுக்கு கொடுத்த வாக்குறுதியை கனிவுடனும் விசுவாசமுடனும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்த்தார். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.
- தகுதிக்கு, தராதரத்திற்கு, சுகபோகங்களுக்கு, உயர்வாக கருதுபவைகளுக்கு, கிடைத்திருப்பதைவிடக் கூடுதலானவற்றை பெறும் நோக்கில் இறைவனுக்கு சமமாவதற்கு முயற்சி செய்த மனிதன் கனிவுடையவனாவதற்குப் பதிலாக ஆணவம் எனும் பாவத்தில் வீழ்ந்தான்.
- அவ்வாறு மனிதன் ஆணவக்காரனானாலும் இறைவன் கனிவுடையவரானார். பாவத்தில் வீழ்ந்த மனிதனை மீட்டிட ஆண்டவர் மனிதனாக இவ்வுலகிற்கு வந்தது கனிவு எனும் குணத்தை காட்டியவாறே ஆகும்.
- ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தன் வாழ்நாள் முழுவதும் கனிவான குணத்தை வெளிப்படுத்தினார். அது எவ்வாறெனில் தனது வாழ்வினையே பலியாக்கினார்.
- பிலிப்பு 2:6-8 வரையிலான பகுதியை பொதுவில் வெளிப்படுத்தவும். இயேசு கிறிஸ்துவிடமிருந்த கனிவான குணத்தைப் பற்றி அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்.

04. வாரம் முழுவதும்

பிலிப்பு 2: 6-8 பகுதியின் வழியாக இயேசுக்கிறிஸ்து ஆண்டவரை நோக்கும் நாம் எம் முன்னிலையில் இருக்கும் சவாலுக்கு விழிப்புறுவோம்.

- கனிவான குணமுடைய நீ உண்மையில் பேறுபெற்றவள் என ஆண்டவர் உங்களுக்கும் எனக்கும் கூறுகிறாரர் எமது வாழ்வினைத் திரும்பிப் பார்த்து தியானிப்போம்.
- எமது வாழ்க்கை முறை, பிரதிச் செயல்பாடுகள் அனைத்தும் கனிவான குணம் வெளிப்படுகின்ற செயல்பாடுகளா ஆராய்ந்து பார்ப்போம்.
- கனிவுடையோருக்கு இறைவன் அருளுகின்ற மேன்மையாகிய நிலையான வாழ்வினை உரிமையாக்கிக் கொள்ளும் வரத்தினை வேண்டி செபிப்போம்.

05. இறுதிப் புகழ்ச்சி புபுது பாடல் இல 105 “தாரும் ஆண்டவரே எனக்கு……..”